
அரியாலைக் கலைஞர்கள்

திருவாளர்கள்

- வே. ஐயாத்துரை
- க. இரத்தினம்
- கு. கந்தையா ஆகியோரின்

# கலைப்புகழ் விழா மலர்




University of Jaffna
894.81106
SRI
250251(AR; Main)

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம்

23 - 06 - 1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
சுத்தம் சுகம் தரும்.
இயற்கையன்னையின் இணையற்ற செல்வம்,
இறைவன் எமக்களித்த கற்பகதரு.



சுத்தமான முறையில் தயாரிக்கப்பட்ட
பனஞ்சீனி, பனங்கற்கண்டு, பனங்கட்டி, பனம்பானம், பதநீர்
முதலியவற்றிற்கும் அழகான பன்னவேலைப் பொருட்களுக்கும்
மொத்தமாகப் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்.

# அரியாலை
# தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்

அரியாலை, யாழ்ப்பாணம்.

உங்களுக்கு தேவையான வாங்குகள், வாடகைக்கு
பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் அன்பளிப்பு 10/7/84

UNIVERSITY OF JAFFNA LIBRARY

அரியாலைக் கலைஞர்கள்

திருவாளர்கள்

- வே. ஐயாத்துரை
- க. இரத்தினம்
- கு. கந்தையா ஆகியோரின்

# கலைப்புகழ் விழா மலர்

AR 894 KAV 811.06



University of Jaffna
250251
Library

250251

250251

ARCHIVES

## அரியாலை
## ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம்

## 1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பெரும் கலைஞர்களின் கலைச்சேவை
மென்மேலும் தொடர மனமார
வாழ்த்துகிறோம்.

## ஆ. செல்வநாதன்
### மண்ணெண்ணை ஏஜென்ஸி
22, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

அரியாலையின் பெயரை
அகிலமெங்கும் ஒளிரச்செய்த
மும்மணிகளுக்கும் எம்
வாழ்த்துக்கள்

## மெடிகெயர் கிளினிக்
45, புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

பழைய புதிய திரைப்படங்களை
பார்த்து மகிழ்வதற்கு, சிறந்த
வீடியோ டெக், T. V.
ஆகியவற்றை வாடகைக்குப்
பெற்றுக்கொள்வதற்கு

## லிங்கம் வீடியோ சென்ரர்
க. சண்முகலிங்கம்
கனகரத்தினம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

250251

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் ஆசிரியர் பேனு முனையில் . . . .

# முத்தான மூன்று கலைஞர்கள்

முத்தமிழிலொன்றான நாடகக்கலைக்குப் புத்துயிர் அளித்த இம் முப் பெருங் கலைஞர்களும், வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுதே ஒரு புகழ் விழா மலர் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இயலையும், இசையையும் தன்னகத்தே கொண்ட நாடகக்கலை, ஒரு மனிதனின் தனித்துவத்தைப் பிரதிபலிப்பதாகவும் உள்ளது. உணர்ச்சி, கிளர்ச்சி. மனக்கவர்ச்சியை அளிக்கும் நாடகக்கலை தமிழ் நாகரிகத்துடன் வளர்ந்து வந்திருக்கின்றது. நாடகத்தில் தாளம், பாவனை, அலங்காரம், இரசம், என்னும் அம்சங்கள் அமைந்துள்ளன. மேல் நாட்டில் சேக்ஸ்பியர், பெர்னட்சா போன்றோர் நாடகக் கலைக்குப் புதுமெருகளித்தனர்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்னும் வள்ளுவன் வாக்கிற்கிணங்க கலைத்துறையில் இம்மூன்று கலைஞர்களும் மிளிர்கின்றார்கள். திரு. வே. ஐயாத்துரை அவர்கள் நாடகத்துறையுடன் கவிதையிலும். திரு. க. இரத்தினம் அவர்கள் கட்டடத் துறையிலும், திரு. கு. கந்தையா அவர்கள் விஷகடி வைத்தியத்திலும் சிறப்புற்று விளங்குகிறார்கள்.

அரியாலையில் கலைவளர்க்கும் கலையகமாக விளங்கும் ஸ்ரீ கலைமகள் சன சமூக நிலையத்தின் அங்கத்தவர்களாகிய இம் மூவரையும் பாராட்டி மலர் வெளியிடுவதன் மூலம் மேலும் பல கலைஞர்கள் அரியாலையில் உருவாக வேண்டுமென்பதே எமது பெரு விருப்பமாகும். கலைஞர்களைப் புகழும்போது கலைத்துவம் எழுச்சியுறுகிறது. இம் முத்தான மூன்று கலைஞர்களுக்கும் பாராட்டு மலர் ஒன்றை வெளியிடுவது நியாயமான தொன்றேயாகும். நடிகர்கள், கவிஞர்கள், எழுத்தாளர் பாடகர்கள் மிக்க அரியாலையில் இம்மலர் வெளியீடு கலைத்துவ வளர்ச்சிக்கு ஒரு மைல் கல்லாக அமையும்.

அழகியலுணர்வை வளர்க்கும் அறிவு முயற்சியாகிய கலையைப் புனிதமாகப் போற்ற வேண்டும்; கலைஞர்களைப் பாராட்ட வேண்டும். அப்பொழுதுதான் தமிழ் மொழியின் கலை பாதுகாக்கப்படும்.

இ. அரசகேசரி
மலர் ஆசிரியர்.

அரியாலை, யாழ்ப்பாணம்.
15-6-1984


*"சிந்தனைகளைவிடச் செயல்களே ஒரு மனிதனின் குணதிசயங்களை முழுமையாக வெளிப்படுத்துகின்றன.*

— டபிள்யூ. எஸ். புளுமர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES

விழாக்காணும் முப்பெருங் கலைஞர்களையும் வாழ்த்துவதில் பெருமையடைகிறோம்.



சகலவிதமான தானியங்களையும் உடனுக்குடன் அரைத்துப் பெற்றுக்கொள்வதற்கு நாடுங்கள்

# ஜெயா கிறைண்டிங் மில்ஸ்

தபாற்கட்டைச் சந்தி,
அரியாலை,

கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத் தலைவர் அவர்களின்

# அன்புச் செய்தி

## கலை வளர்க்கும் கலைஞர்கள்

கலை வளர்க்கும் ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் அங்கத்தவர்களாகிய இம் மூன்று கலைஞர்களையும் கௌரவித்து விழாவெடுப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது சமூகத்தில் கலைச்செல்வர்களை உருவாக்கிய, கவிஞர் திரு. வே. ஐயாத்துரை அவர்கள், தமிழின் பெருமையைக் கவிதை மூலம் எடுத்துக் காட்டியவர். இவர் இசையோடு கவிபாடும் திறன் படைத்தவர். அதிகாலையில் இவர் சரஸ்வதி அம்பாள் ஆலயத்தில் பாடுவதைத் தினமும் கேட்க முடியும். நாடகமூலம் அறிமுகமாகி, கவிதை மூலம் புகழ்க்கொடி நாட்டியவர். காந்தி நூற்றுண்டு விழா கவிதைப் போட்டியில் முதற் பரிசிலைப் பெற்று, அதற்கான பரிசிலை திருமதி பண்டிட் விஜயலட்சுமியிடம் வாங்கிக் கொண்டவர். மற்றும் சாகித்திய மண்டலம், கூட்டுறவுத்துறை கவிதைப் போட்டிகளில் பரிசில்களைப் பெற்று எமது சமூகத்தையும், ஊரையும் நன்கறியச் செய்தவர். வெள்ளைக் கமலம் என்னும் கவிதைத் தொகுப்பு நூலை வெளியிட்டவர். அதில் அவருடைய கவிதா சக்தியை நன்கு காணலாம்.

கலைஞர் க. இரத்தினம் அவர்களுக்கு அரிச்சந்திரா நாடகத்தில் சந்திரமதி பாத்திரம் நன்கு புகழை ஈட்டிக்கொடுத்தது. அப் பாத்திரத்தால் மகனைப் பிரிந்து படும் வேதனை யாரையும் உருக்க வல்லது. அவருடைய நாடகப்பாணி தனித்தன்மையானது. வேடப் பொருத்தமுள்ள நடிகர் என்றால் அது மிகையாகாது. அல்வாயூரில் நாடகம் நடந்துகொண்டிருந்தபோது மழை பெய்தது. இதனால் பெண் வேடம் போட்ட இரத்தினம் அவர்கள் ஆண்களுடன் சேர்ந்து மழைக்கு ஒதுங்க ஓடும்போது, நிஜமான பெண்கள் இவரை பெண்கள் பக்கம் வாருங்கள் என அழைத்தனராம். வேடப் பொருத்தத்திற்கு இதுவே போதுமல்லவா? இவர் சாவித்திரி, நல்லதங்காள், பவளக்கொடி, ஸ்ரீ வள்ளி போன்ற நாடகங்கள் மூலமும் சிறப்புப் பெற்றார். எவருக்காயினும் நாடகம் பழக்குவதென்றால் பின்நிற்காதவர்.

காத்தார் கந்தையா என அழைக்கப்பெறும் திரு. கு. கந்தையா அவர்கள் தென்மோடி நாடகமான காத்தவராயர் மூலம் புகழ் பெற்றவர், சிறுவயதில் இவர் பாடி நடித்ததை நான் பார்த்துப் பிரமித்துப் போனேன். எமது சமூக மக்களின் மரணச் சடங்குகளில் இவர் தேவாரம் பாடும்போது கேட்டால் அழாமல் இருக்கமுடியாது. அரியாலையில் சிவக்கொழுந்து என்று பெயர்பெற்ற வைத்தியரிடம் விஷகடி வைத்தியம் கற்று விஷகடி வைத்திய மூலம் பல மக்களுக்கும் தொண்டாற்றி வருகிறார்.

இத்தகைய அரிய கலைஞர்களை நாம் பாராட்டி விழாவெடுப்பதன் மூலம், மேலும் பல கலைஞர்கள் உருவாக வாய்ப்புண்டு என்ற நம்பிக்கையுடன் இம்மலருக்கு எல்லா வகையிலும் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கு அன்புக் காணிக்கையை செலுத்த கடமைப்பட்டுள்ளேன்.

ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம்,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.
11-6-1984

ஏ. வீரசிங்கம்
நிலையத் தலைவர்

"செயல்படாத மனிதனுக்கு ஒரு மகிழ்ச்சியும் கிடையாது."

— டிஸ்ரேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளர் இதயத்திலிருந்து

## உங்களுடன் ஒரு நிமிடம்

''கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தின்
முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி''
என்பது ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொண்ட உண்மை.
தமிழ் என்றால் அதற்கொரு தனித்துவம் உண்டு.
தமிழர் பண்பாடு மேலை நாட்டவர்களாலும் மெச்சப்படுகின்றது.

முத்தமிழான இயல், இசை, நாடகம் என்பன தமிழின் சிறப்பியல்பைக் காட்டுவன.

முத்தமிழில் வல்லவர்கள் எமது ஊரின் அருமை, பெருமையை நாடறியச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நாம் வாழும்பொழுதே கௌரவிக்க வேண்டியது எமது கடமை.

இந்த வகையில் எமது நிலையத்தைச் சேர்ந்த முதுபெரும் கலைஞர்களான திருவாளர்கள் கு. கந்தையா கவிஞர் வே. ஐயாத்துரை கலைஞர் வீ. கே. இரத்தினம் ஆகியோரை எமது நிலையம் கௌரவித்து அவர்களுக்கு பாராட்டுவிழா நடாத்தித் தன்னையே பெருமைப்படுத்திக் கொள்கின்றது.

மாலையுடனும், பாராட்டுரைகளுடனும் விழா நின்றுவிடக் கூடாதென என்றுமே நிலைத்திருக்கக் கூடிய ஒரு சிறப்பு மலரை வெளியிட வேண்டுமென்ற எண்ணம் எமக்கேற்பட்டது.

இம் மலரை வெளியிடுவதற்கு நாம் பல சிரமங்களை அநுபவிக்க வேண்டியிருந்தது.

ஒரு தாய் வேதனைக்குப் பின் குழந்தையொன்றைப் பிரசவித்து இன்பம் அடைவது போலத்தான், இந்த மலர் வெளிவருவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். எமது பொறுப்புக்களைத் தாமே ஏற்று, எங்களை இம்மலர் வெளியீட்டில் கூடிய கவனம் எடுத்து வெளிவரச் செய்வதற்குக் காரணமாக இருந்த இளைஞர்களை நன்றியறிதலுடன் நினைக்கின்றேன்.

மலரை வெளியிடுவதற்குரிய செலவுகளை ஏற்ற வர்த்தகப் பிரமுகர்களை என்றுமே மறக்கமுடியாது.

பாராட்டுப் பெறும் கலைஞர்களுக்குப் பாராட்டுரைகளும் ஆசியுரைகளும் வழங்கியவர்கள் நம் கலைஞர்களின் ஆற்றல்களை நன்கறிந்தவர்கள். அவர்களுடன் கூடப் பழகியவர்கள். தமிழ் கூறும் நல்லுலகில் நிலையான இடத்தை வகிப்பவர்கள். அவர்கள் மனமுவந்து அளித்த செய்திகளுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது நிலையச் சார்பில் வெளிவரும் இம்மலர் எமக்குப்பின் தொடர்ந்து வரும் நிருவாகங்கள் பல முன்னேற்றமான நற்செயல்களைச் செய்வதற்கு அன்னை கலைவாணி பூரண ஆசியை என்றுமே அருளுவாள்.

74, கலைமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

செ. செல்வக்குமாரன்
செயலாளர்
அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம்

''பழக்கத்துக்கு அடிமைப்படுவது கண்கட்டி விளையாடுவது போன்றது''
— மெர்ஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை மாமணிகள்



திரு. வே. ஐயாத்துரை
அவர்கள்



திரு. க. இரத்தினம்
அவர்கள்



திரு. கு. கந்தையா
அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியான் ஆசியுரை

# கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை

என் வீட்டிற்கு அருகில் ஒரு சிறுவர் பாடசாலை இருக்கின்றது. அதில் என் மகள் எண் எழுத்தும் ஆடல் பாடலும் கற்றுவந்தாள். ஒருநாள் அவள், பாடசாலை முடிந்து வீட்டிற்குத் திரும்பி வரும்போது ஒரு பாடலைப் பெரிதாகப் பாடிவந்தாள்;

'புத்தகந் தன்னைக் கிழித்தெறியோம்
புதியது மங்கா உறையிடுவோம்
நித்தியம் பாது காத்திடுவோம்
நேரம் தவருது படித்திடுவோம்'

என் மகள் பாடிய இப்பாடல் என்னை மிகவும் கவர்ந்தது. யாரோ ஒரு குழந்தைக் கவிஞன், இளஞ்சிருர்களின் மனப்பக்குவத்திற்குரியதாகப்பாடியிருக்கிருன்; சிறுவர்கள் புரிந்து கொள்ளும் சொற்களோடும், இசையோடு பாடக்கூடிய படிமமும் இப்பாடலில் நன்கு அமைந்துள்ளன. இப்பாடலின் கர்த்தா யார் என்று அறியும் ஆவல் எழுந்தது. அச்சிறுவர் பாடசாலையின் ஆசிரியைச் சந்திக்க நேர்ந்தபோது நினைவாகக் கேட்டேன். அந்த ஆசிரியைக்கும் 'யார்' என்பது தெரியவில்லை. தனக்கு அப்பாடலைக் கற்பித்த ஆசிரியைக் கேட்டுச் சொல்வதாகக் கூறிச் சென்ருர். இருநாட்களின் பின் மறக்காமல் வந்து அப்பாடலை இயற்றிய கவிஞரின் பெயரைக்கூறினுர்; நான் வியப்பில் ஆழ்ந்தேன்.

அப்பாடலைப் பாடியவர் வேறுயாருமல்லர். நமது ஈழத்துக்கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை அவர்கள் தான். எனக்கு நன்கு பழக்கமான ஒரு கவிஞர் பாடிய பாடல் அது என்று அறிந்தபோது உண்மையில் எனக்குப் பெருமிதம் ஏற்பட்டது

கவிஞர் ஐயாத்துரை அவர்களை நான் நன்கு அறிவேன். இரு 'சந்தர்ப்பங்கள்' எங்களிடையே நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்தின. ஒன்று யாழ். இலக்கியவட்டத்தின் ஆரம்பகால உறுப்பினராக அவர் இருந்து வருகிருர். அடிக்கடி நாங்கள் சந்தித்து அளவளாவச் சந்தர்ப்பம் கிடைத்தது. மற்றையது அவர் கவிஞர்; நான் எழுத்தாளன் இருவரும் இலக்கிய ஆக்க கர்த்தாக்கள்.

கவிஞர் ஐயாத்துரையின் கவிதைகள் மட்டும் எளிமையானவையல்ல: அவரும் மிக எளிமையானவர். அவருடைய கவிதைகளில் தூய்மை மிளிர்ந்திருக்கும். சமூகப் பொறுப்போடு, கவிதைகளில் தூய்மை பேணப்பட்டிருக்கும். யதார்த்தம் என்ற பெயரில் அருவருப்பூட்டும் வார்த்தைகளோ, சொற்பிரயோகமோ அவருடைய கவிதைகளில் இருப்பதில்லை. கவிதைகளில் மிகுந்திருக்கும் தூய்மையை அவருடைய உருவத் தோற்றத்திலும் நான் காண்கிறேன். பக்திமயமான தோற்றம். கவிஞரின் 'வெண்கமலம்' என்ற கவிதைத் தொகுதியிலுள்ள கவிதைகள், அவருடைய திறனின் வெளிப்பாடுகளாகவுள்ளன.

கவிஞர் வே. ஐயாத்துரை அவர்கள் பழமையைப்பேணி, புதுமையை வரவேற்பவர். அவருடைய கவிதைகள் மரபு முறைக் கவிதைகள்; ஆனுல், புதுமையான கருப்பொருட்களையும் கொண்டவை. இலக்கணம் மீறிய கவிதைகளை அவர் யாக்கவில்லை. இலக்கியமாகும் கவிதைகளையே அவர் ஆக்கி வருகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தேசிய நூல்களைச் சேகரிப்போமெங்கள்
தேச மெலா மகம் செய்திடுவோம்
வாசினை தன்னிலே மக்களெல்லோரையும்
பாசமே கொண்டாடப் பண்ணிடுவோம்

என்ற கவிஞரின் பாடல் இன்னும் என் நினைவிலிருக்கின்றது: இனிக்கின்றது.

கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை அவர்களைப் பாராட்டி அரியாலை மக்கள் பெரு விழாவெடுக்கிறார்கள்; இப்பெருவிழா பொருந்தமானவருக்கே எடுக்கப்படுகின்றது. தமிழணங்கைப் பாடல்களால் அலங்கரித்து, தமிழ்க்கவிதைத் துறைக்கு வனப்பூட்டும் கவிதை மலர்களைத் தந்துவரும் கவிஞர் ஐயாத்துரை அவர்களுக்கு இந்த விழா பொருத்தமானதே.

இந்த விழா கவிஞர் ஐயாத்துரைக்கு எடுக்கப்படுவதல்ல; தமிழ்க்கவிதை உலகிற்கு எடுக்கப்படும் பெருவிழாவாகும்.

கவிஞர் வே. ஐயாத்துரை அண்ணல் இன்னும் பல்லாண்டுகள் எம்முடன் வாழ்ந்து தமிழ்ப்பணி புரியப் பிரார்த்திக்கின்றேன்.

*"மனிதனுடைய இருதயத்தில் மறைந்து கிடக்கும்*
*நல்ல சக்திகளை மலரச் செய்பவனே கவிஞனுவான்"*

—காந்திஜி—


*நீடித்த பாவனைக்கேற்ற*
பழைய புதிய ரயர் ரியூப்களை
நியாய விலையில் பெற்றுக்
கொள்வதற்கும்

சிறந்த முறையில் ஒட்டு வேலை
செய்வதற்கும் நம்பிக்கையுடன்
நாடவேண்டிய இடம்

**புஸ்பா ரயர் வேக்ஸ்**

பதிவு இல. 6421 9-9-1971
உரிமை: க. தவராசா
290, பிரதான வீதி. யாழ்ப்பாணம்.

*அழகான*
வேலைப்பாடுகளுடன் அமைந்த
வீட்டுத் தளபாடங்கள்
சோக்கேஸ், நிலை, யன்னல்

மற்றும் சகலவிதமான
மரவேலைகளிற்கும்
நம்பிக்கையுடன் நாடுவீர்

**விநாயகர் தச்சுத்**
**தொழிற்சாலை**

19/1, நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை.
உரிமையாளர்: கா. கிருஷ்ணபிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைய கீதம்

ஸ்ரீ கலை மகள் சனசமுக நிலையமே
செகந்தனில் ஓங்குகவே
திருவருள் புரிந்திடும் சரஸ்வதி தேவியின்
திவ்விய நாமவழி (ஸ்ரீ கலை)

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தி யாறும்
ஆண்டினில் ஆரம்பமே
ஆயகலை அரசியின் ஆட்சியின் மாட்சிமை
ஆனந்த அருளகமே! (ஸ்ரீகலை)

பண்புடன் அன்பும் பரிமளித் திடநேர்
பாங்குயர் இல்லங்களே
தண்நிறைப் பச்சையும் தரளமென் வெள்ளையும்
தனிக்கொடித் தலையகமே! (ஸ்ரீகலை)

எழிலுறும் பாலர் பாட சாலையும்
இளைஞர்க லாமன்றமும்
அழகுறும் மாதர் கழகமும் அறிவொளி
அகமுறும் கலையகமே! (ஸ்ரீகலை)

முத்தமிழ் அரங்கு புத்தக அரங்கு
முருகமை கலையரங்கமே
உத்தம நிறைவு நித்திய மகிழ்வு
ஓங்கிநேர் வாழியவே! (ஸ்ரீகலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைப்புகழ் விழாக் கலைஞர்களையும்
வாழ்த்துகிறோம்.

சகலவிதமான பொருட்களையும் தாங்கள் விரும்பிய இடத்திற்கு ஏற்றி இறக்க யாழ் பெரியகடையில் இயங்கும் சிறந்த ஸ்தாபனம்

**"நாதன்ஸ்**
**ட்ரான்ஸ்போட் சேவிஸ்"**

விபரங்களுக்கு:

**S. P. நடராஜா**
கலைமகள் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

அரியாலையில் புகழ்பெற்ற மூன்று கலைஞர்களையும் வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகிறோம்.

**பூரண டிஸ்பென்சரி**
**& பார்மஸி**

**Dr. S.** சுந்தரலிங்கம் D.A.M. & S.(Cey)
439, கண்டி வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

முன்னோர் காட்டிய வெற்றி நிறை நல் முன்னேற்றப்பாதை பின்னோரை நல்முறைப்படுத்துகின்றது. இப்பாதையில் திருவாளர்கள் வே. ஐயாத்துரை, V. K. இரத்தினம், கு. கந்தையா ஆகியோர் கலை உலகின் தரமான மணிகள். அவர்களின் தரமான அம்சங்களை சகலருக்கும் அறியத்தரும் வகையில் விழாவெடுக்கும் நிர்வாகிகளை பாராட்டுகின்றோம்.

# றேடியன்ற் கல்வி நிலையம்

புங்கன்குளம் — அரியாலை

6-ம், 7-ம், 8-ம், 9-ம், வகுப்புகளும், G. C. E. O/L, A/L 84, 85, 86, ஆண்டுப்பிரிவு விஞ்ஞான கலை, வர்த்தகபிரிவுகளும் நடைபெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியாலை கலாமன்றத்தின் இயக்குனர்
## கலாநிதி சு. மோகனதாஸ் அவர்களின் ஆசிச்செய்தி

# பல்லாண்டு காலம் வாழ்க

இயல், இசை நாடகத்துறையில் நெடுங்காலமாகவே யாழ்ப்பாணத்திலே முதன்மை பெற்று விளங்கும் அரியாலையூர் பதியிலே தோன்றி சிறுபராயம் முதல் முத்தமிழின் வளர்ச்சிக்காக, குறிப்பாக நாடகத் துறையில் தம்மை ஈடுபடுத்தி இன் றும் புகழுடன் விளங்கும் பிரபல விஷக்கடி வைத்தியர் திரு கந்தையா (காத்தான்) அவர்களுக்கும், அரியாலையூர் கவிஞர் திரு வே. ஐயாத்துரை அவர்களுக்கும், சோக சோபித சொர்ணக் கவிக்குயில் திரு. வி. கே. இரத்தினம் அவர்களுக்கும் பாராட்டு விழா நடத்துவது உண்மையில் பாராட்ட வேண்டிய ஒன்றே. வாழும்போதே கலை ஞர்களை வாழ்த்தும் அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் இப்பெரும் பணியை எமது கலாமன்றமும் வாழ்த்தி நிற்கிறது. இதே சமயம் இம்முப்பெரும் கலைஞர்களுக் கும் முன்னோடியாக விளங்கிய மறைந்த கவிஞர் திரு. நீலன் கணபதிப்பிள்ளை அவர் களை நினைவு கூர வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

காத்தான் கூத்து என்ற சிந்து நாடகத்தின் மூலம் நாடகத் துறையுள் புகுந்த திரு கந்தையா அவர்கள், தான் ஏற்று நடித்த பாத்திரமான காத்தான் என்ற பெயரால் யாவரும் அழைக்குமளவுக்கு நடிப்பாற்றல் மிக்கவர். காத்தவராயன் நாட கம் முழுவதையும் இன்று கூட ஒப்புவிக்குமளவுக்கு இந்நாடகத்தோடு ஊறிப்போனவர். ஒலிபெருக்கி இல்லாத அந்தக் காலத்திலும் உயர்ந்த ஸ்தாயியில் மிகவும் இனிமை யாக பாடும் வல்லமை மிக்கவர் என இன்றும் பல பெரியோர்கள் இவரைப் புகழ்வர்.

எமது மன்ற நிர்வாக உறுப்பினரான திரு வே. ஐயாத்துரை அவர்கள் பவளக் கொடி நாடகம் மூலம் தனது 6வது வயதில் மேடையேறியவர். தொடர்ந்து ஸ்ரீவள்ளி, ஆரியமாலா, பிரகலாதன், மதனசேனு, அசோக்குமார் போன்ற பிரபல நாடகங்களில் பங்கேற்ற இவர் தனது 60வது வயதிலும் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவினரின் ராஜ ராஜ சோழன், மனோமணி நாடகங்களில் நடித்து பெருமை சேர்த்தவர். தமிழ் உலகறிந்த சிறந்த கவிஞரான இவர் காந்தி நூற்றாண்டு விழா, சர்வதேச கூட்டுறவு தினவிழா கவிதைப்போட்டிகளில் முதற் பரிசு பெற்றவர். சிறந்த பாடகரும், பேச்சாளருமான இவர் சகலகலா விற்பன்னராகத் திகழ்வது எமக்கெல் லாம் பெருமையே.

திரு. வி. கே. இரத்தினம் அவர்கள் பெண் வேடம் ஏற்று பாடி நடிப்பதில் புகழ் பெற்றவர். வள்ளி, அல்லி, சாவித்திரி, சந்திரமதி, பவளக்கொடி, ஞானசௌந்தரி, சித்திராங்கனி இவர் நடித்த பாத்திரங்களில் சில. நடிகமணி வி. வி. வைரமுத்துவுடன் பல நாடகங்களில் பங்குபற்றி நாடகங்களைச் சிறப்புச் செய்தவர். சிறந்த இசை, நாடக நெறியாள்கையாளரான இவர் எமது மன்ற நிர்வாக உறுப்பினராக இருப்பது மட்டுமல்லாது மன்றம் நடாத்துகின்ற நாடகமேடைப்பாடல் வகுப்புகளில் பங்கு கொண்டு பயிற்சியளித்து வருகிறார்.

இம்மூன்று கலைஞர்களுக்கும் பாராட்டுவிழா எடுக்கின்ற இந்த நேரத்தில் இவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து கலைக்குத் தொண்டாற்றி எமக்கு வழிகாட்டி யாகத் திகழ இறைவனை வேண்டுகிறோம்

**வாழ்க கலை! வளர்க கலைஞர்கள்!!**

*அரியாலை, யாழ்ப்பாணம்.*
***14-6-1984***

*"நிதானம், நீதி, வீரம், பெருந்தகைமை உண்மை,*
*இவைதான் ஆத்மாவின் அணிகலன்கள்"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர்
திரு. க. நடராசா அவர்களின்
வாழ்த்துச் செய்தி



# நாடறிந்த கலைஞர்கள்

எமது கலை, கலாச்சாரம் பாரம்பரியம் மிக்கவை. இக்கலைகள் அழிந்து போகாமல் காலம் காலமாகப் பாதுகாத்து வளர்த்து வரும் எமது கலைஞர்கள் சாதனை வீரர்கள். எம்மிடையே வாழும் கலைஞர்களை அவர்களின் காலத்திலேயே நாம் கௌரவித்துப் போற்ற வேண்டும். அப்பொழுதே அவர்களின் முழு ஆற்றலையும், திறமையையும் நாடுபெற்று அனுபவிக்க முடியும். எமது சமுதாயமும் பெருமை பெற முடியும்.

பல்வேறு துறைகளிலும் முன்னணியில் திகழும் அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் இத்தகைய முன்மாதிரியை மேற்கொண்டு எமது கலைஞர்களைக் கௌரவித்துப் பாராட்ட முன்வந்துள்ளது மகிழ்ச்சியளிப்பதுடன் பாராட்டிற்குரியதுமாகும். அரியாலைக்குப் பெருமை சேர்த்த நாடறிந்த கலைஞர்கள் மூவருக்கு ஒரே சமயத்தில் விழா வெடுப்பது மாபெரும் சாதனையாகும்.

நாடறிந்த கலைஞர்கள் கவிஞர் வே. ஐயாத்துரை, கலைஞர் இரத்தினம், கலைஞர் காத்தான் கந்தையா ஆகியோர் கலைத்துறையில் புடம் போட்ட பொன்போல் மிளிருகின்றார்கள். இக்கலைஞர்கள் மூவரின் புகழும் பெருமையும் இன்று நாடெங்கும் பிரகாசித்து விளங்குவதற்குக் காரணம் இம்மூன்று கலையரசுகளின் தனித்துவமும், கலைத் திறனுமேயாகும். இக்கலைஞர்களுக்கு விழாவெடுத்து சிறப்புமலர் வெளியிடுவது முற்றிலுப் பொருத்தமானதே! விழா நாயகர்கள் கலைஞர்களின் புகழ் திக்கெட்டும் ஒளிர அவர்தம் கலைப்பணி என்றும் எமக்குத் தொடர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

பனை அபிவிருத்திச்சபை.
*12-6-1984*

*“உண்மையானகலை, கலைஞரின் தூய்மை, மகிழ்ச்சி மன நிறைவு ஆகியவற்றிற்குச் சான்றாக இருக்க வேண்டும்”*

— காந்திஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல எழுத்தாளரும் மல்லிகை ஆசிரியருமான
டொமினிக் ஜீவா அவர்களின்

## பாராட்டுரை

# பலரின் கௌரவத்திற்கும் மதிப்புக்குமுரியவர் கவிஞர் ஐயாத்துரை

இன்றும் எனக்குத் தெளிவாக ஞாபகம் இருக்கின்றது. நான் முதன் முதலில் சாஹித்திய மண்டலப் பரிசைப் பெற்றுக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பிய நேரத்தில் அந்த இனிய முகத்திக்கும் புன்னகைக்குமுரியவர் என்னை நேரில் வந்து பாராட்டிச் சென்றார். அவரைப்பற்றிப் பின்னர் விசாரித்துத் தெரிந்து கொண்டேன்.

அவர்தான் கவிஞர் ஐயாத்துரை, அவர்கள். அத்துடன் நில்லாது பின்னர் தனது ஆளுரைக்கு உட்பட்டு வெகு சிறப்பாக அரியாலையில் நடந்து வந்த கலைமகள் வாசிகசாலைக்கு என்னை அழைத்துப் பாராட்டுக் கூட்டம் நடத்தி என்னைச் சிறப்பித்தவரும் இவரே.

தொடர்ந்தும் எங்களது உறவு மிக நெருக்கமாகவே வளர்ந்து வந்துள்ளது.

பலர் கவிதை எழுதுவார்கள். வாசித்து ரஸிக்கலாம். இன்னும் சிலர் புதுக் கவிதை புனைவார்கள். அதன் ஆழத்திலும் கருத்துச் செறிவிலும் மனதைப் பறிகொடுக்கலாம். ஆனால் ஐயாத்துரைக் கவிஞரின் ஆக்கங்களை அவரைக் கொண்டே மேடைகளில் பாடக் கேட்க வேண்டும். அதை ரசிப்பதே தனிப் பெரும் சுகமாகும். இப்படியான கவிதைப் பாடல்களைப் பலமுறை நான் மேடை.களில் கேட்டிருக்கின்றேன்.

அந்தத் தனித்துவ மேடைப் பாடல்களே இவரைத் தனித்துப் பெருமைப்படுத்தி வருபவையாகும்.

இவரை ஆரம்பத்தில் கவிஞர் என்றே நான் கருதி வந்திருக்கின்றேன். அதிலும் இசையோடு குரலெடுத்து மேடைகளில் பாடும் சிறப்பு மிக்க கவிஞர் என்றே ஆரம்ப முதலே எண்ணி வந்திருக்கின்றேன்.

ஆனால், சில மேடை நாடகங்களில் இவரது நடிப்பைப் பார்த்து ரஸிக்கும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது. கவிஞராகப் பார்த்துப் பழகிய எனக்கே ஆச்சரியம்! இப்படியான நடிப்புத் திறமையைத் தன்னுள் அடக்கி வைத்துக்கொண்டு இவர் இத்தனை நாட்களும் கவிஞராகவே எப்படிக் காட்சி தந்தார். என்று எனக்குள் நானே வியந்திருக்கின்றேன்.

யாழ்ப்பாணத்தில் பல மேடைகளிலும் இவரது நாடக நடிப்பைப் பார்த்த பின்னர் இவரை நான் அடிக்கடி ஊன்றி அவதானிக்கத் தொடங்கினேன்.

பழகுவதற்கு இனிமையானவர்; அடக்கமானவர். சிறந்த பண்பாளர். கலை இலக்கியத் துறையில் ஒரு சாபக்கேடு கொஞ்சம் பேரும் புகழும் வந்து விட்டாலே தங்களை விடக் கொம்பன்கள் இல்லை, என்ற மமதை மனப்பான்மையுள்ளோர் பலரை எனக்குத் தெரியும். அந்த அகங்காரச் செருக்கு நிலையே பல திறமை வாய்ந்த கலைஞர்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
250251

பாழ்படுத்தி ஒழித்திருக்கின்றது. ஆனல் நீண்ட காலப் பழக்கத்திற்குப் பிறகும் எனக்கு இவரிடம் பிடித்த நல்ல அம்சம் இவரது எளிமையும், மென்மையான சுபாவமும் அடக்கமும் தான். கவிஞர் ஐயாத்துரை எளிமையானவர் என்று அடக்கமானவர் என்று மாத்திரம் நினைத்து விடக் கூடாது. அந்த அடக்கத்துக்குள்ளே அழுத்தமான மனவலிமை வாய்க்கப் பெற்றவர். தனது திறமையிலும் ஆற்றலிலும் அசைக்க முடியாத நம்பிக்கையுள்ளவர்.

மறைந்த நண்பர் கனக செந்திநாதன் எனக்கு ஒரு தடவை இவரைப் பற்றிச் சொல்லும் பொழுது: 'அடச் சொக்கா' சோக்கான ஆளாக்கும் இந்தக் கவிஞர் ஐயாத்துரை. வலு கெட்டிக்காரன். எல்லாத்தையும் விட, பழகுவதற்கும் இவரிடமிருந்து படிப்பதற்கும் நிறைய இவரிடம் விஷயங்கள் இருக்கிறது. என ஒரு சந்தர்ப்பத்தில் என்னுடன் பேசும் போது இவரது குண இயல்புகளைப் பாராட்டிச் சொன்னது எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகம் வருகின்றது.

அதே நண்பர் செந்திநாதன் ஆரம்பித்து இயக்கிய யாழ். இலக்கிய வட்டம், இலக்கிய அமைப்பில் தன்னையும் ஓர் அங்கமாக இணைத்துப் பிணைத்துக் கொண்டு ஒட்டப்பட்டதை யாரும் மறக்க மாட்டார்கள். அந்த இலக்கிய வட்டத்தின் வளர்ச்சிக்கு மனமுவந்து பணி செய்வதுடன் பொறுப்பான பதவியையும் இவர் வகித்து வந்துள்ளார்.

நடைமுறையில் இவரொரு சாமிப்போக்கு. சாமிப் போக்கு என்று கூறும் போது எல்லா வற்றையும் துறந்த மனநிலையில் அல்ல. எல்லா வற்றிலும் தன்னை உட்படுத்தி தினசரி இயங்கி மக்கள் சேவையிலேயே தனது தினசரி வாழ்க்கையை மூழ்க வைத்துக் கொண்டே, அதனில் நின்று விடுபட்டு தனித்து எட்ட நின்று பார்க்கும் பற்றற்ற மனநிலை இவருக்குக் கைவந்துள்ளது.

கவித்துவ மனதின் உச்ச நிலை இதுதான். யாரையும் மிக எளிதில் நேசிக்கும் இவரை மற்றவர்களும் சிநேகிக்கத் தவறுவதில்லை. எல்லாருக்கும் உபகாரியாக இருக்க வேண்டும் என்ற மன அவசத்தினல் பல பொது வேலைகளையும் தனது தலையில் போட்டுச் சுமந்து முடிப்பதில் தனி இன்பம் காண்பவர் இவர்.

முழுமையாகப் பார்க்கப் போனல் கவிஞரது சுற்றுடல் சூழ்நிலைதான் இவரை, உருவாக்கியது எனச் சொல்லலாம். சுற்றுடல் சூழ்நிலையை இன்று இவரே உருவாக்கி வருகின்றர். அரியாலை என்ற பெயரைக் கேட்டதும் கலை இலக்கியத்துறையைச் சார்ந்தவர்களுக்கு உடனே இவரது பெயர் தான் முதலில் ஞாபகத்திற்கு வரும். அந்தளவிற்கு தனது இடையறாத நல் உழைப்பின் தாக்கத்தால் தனது நாமத்தை தான் இன்று வரும் பகுதியில் முத்திரையாகப் பதிந்துள்ள கவிஞரது சேவை என்றுமே உலகில் மிக மரியாதையுடன் பேசப்படும் என்பது நிச்சயமாகும்.

யாழ்ப்பாணம்.
14-6-1984

"செய்யுளை விலங்கிடின் அது மனித
வர்க்கத்தையே விலங்கிடும்"

— வில்லியம் ப்ளேக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின்
முன்னாள் தலைவரும், ஆசிரியருமான
திரு. வ. இராசையா அவர்களின் ஆசியுரை

# பெருந் தொண்டன்

குஞ கஞ என்று அன்பாய் அழைக்கப்படும் திருவாளர் கு. கந்தையா அவர்கள் அரியாலை சிறீ கலைமகள் சனசமூக நிலையத்தின் அங்கத்தவர்களுள் ஒருவராகும். இவர் நாடகக் கலைத்துறையிலே மேம்பட்டவராகப் போற்றப்பட்டிருக்கிறார். இவர் ஒரு இசைப்பிரியன். தேவாரங்களைப் பண்ணுடன் பாடுவதில் வல்லவர். மரணச்சடங்குகளிற் பங்கு பற்றாத இடமே இல்லை. எவ்விடத்திலும் கலந்து தேவாரம் பாடி மக்களின் மனதை உருக்கிக் கண்ணீர் வடிக்கச் செய்வார். வயது முதிர்ந்த இப்போதும் இறைவன் பெரிய வரத்தைக் கொடுத்திருக்கிறார். விஷம் கடித்த மனிதர்களின் உயிரை மீட்டுக் கொண்டிருக்கிறார். இதுவே இவர் பெற்ற வரமாகும். இடையிடையே சோதிடத்தின் சிறப்பைப் பற்றியும் மக்களுடன் பேசிச் சந்தோஷப் படுத்துவார்.

மணி, மந்திரம், ஒளடதம் முதலிய கலைகள் நிரம்பப்பெற்ற இவருக்கு நீண்ட சுகத்தையும், நல்ல பெலத்தையும், என்றும் சந்தோஷத்தையும் கொடுக்கவேண்டு மென்று நாங்கள் எல்லோரும் கடவுளை வேண்டுதல் செய்கின்றோம்.

சுபம்.

அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.
10-6-1984.

*"நல்லோரைக் காக்கவும், தீயென செய்வோரை அழிக்கவும், அறத்தை நிலை நிறுத்தவும் நான் யுகந்தோறும் பிறக்கிறேன்."*

— ஸ்ரீ கிருஷ்ணர்

---

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையப் போஷகரும்,
முன்னாள் தலைவருமாகிய திரு. சி. திருநாவுக்கரசு அவர்களின்

# ஆசிச் செய்தி

ஸ்ரீ கலைமகள் ச. ச. நிலையம் தனது 38 வது ஆண்டு நிறைவு விழாவை சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்நேரத்தில் எனது ஆசிச் செய்தியை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்நிலையத்தின் ஆக்கங்களும், ஊக்கங்களும் சிறியோர் முதல் பெரியோர் வரை உற்சாகம், கட்டுப்பாடு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, கலை, கலாச்சாரம் போன்றவற்றில் முன்னணியில் திகழ வகை செய்கிறது. இந்நிலையம் தன் பணியைத் தொடர்ந்து செய்யவேண்டும். மக்கள் நன்மை பெறவேண்டும் என வாழ்த்துகின்றேன். அத்துடன் எமது ஊர்க்கலைஞர்கள் தங்கள் பணிகளை தொடர்ந்தும் செய்யவேண்டும்; அவர்களால் எம் மக்கள் பலன் பெற வேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.

அரியாலை, யாழ்ப்பாணம்.
16-6-1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெடிக்கல் சென்ரர்

569, பீச்றோட், குருநகர்.

நாள்பட்ட நோய் ஏதுவாக இருந்தாலும் எம்மை கலந்தாலோசியுங்கள்

சித்த ஆயுர்வேத ஹோமியோபதி அக்குபஞ்சர் வைத்தியத் துறையில் தேர்ச்சியும், அனுபவமும் வாய்ந்த வைத்தியர்கள் விஷேச ஆலோசனையும், சிகிச்சையும் அளிப்பார்கள்

டாக்டர் எம். தேவமதுரம் D. A. M.; D. Ac.
R. S. M. P. (இலங்கை)
M. I. H.; M. T. M. I. (இந்தியா)

உங்கள் கிணற்றில் நீர் இல்லையா?
அல்லது
குழாய்க்கிணறு அமைக்கவேண்டுமா? நல்ல நீரூற்று பரிசோதித்து உங்களின் தேவையைப் பூர்த்தி செய்யுங்கள்.

நூற்றுக்கணக்கான கிணறுகளை அமைத்து அனுபவம்பெற்ற இராஜி குழாய் கிணறு அமைப்பாளர்களை நாடுங்கள்.

விபரங்களுக்கு:

## இராஜி குளாய் கிணறு அமைப்பாளர்

இல: 30, நொத்தாரிஸ் லேன்,
அரியாலை, யாழ்ப்பாணம்.

உரிமை: செ. இராசரட்னம்

பழைய புதிய திரைப்படங்களை ஒறிஜினல் பிரதியாக உடனுக்குடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**K. R. வீடியோ சேவை**

## K. R. றேடர்ஸ்

நல்லூர் சந்தை,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்களின் பாராட்டுரை

# அரங்கு பல கண்ட அரியாலை இரத்தினம்

கலைஞர் இரத்தினத்தை 1943-ம் ஆண்டு யாழ் - நகர மண்டபத்தில் நடை பெற்ற ''சதி நந்தாவதி'' என்னும் நாடகத்தில் பார்க்கிறேன். இவர் அந்நாடகத்தின் கதாநாயகியான பெண் வேடத்தில் தோன்றினுர்; பாடினுர்; பேசினுர்; நடித்தார்; நடனம் ஆடினுர். அக்காலத்தில் சினிமாவின் தாக்கம் நாடக மரபை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. அவர் இக்கால சினிமா நடிகர்களைப் பின்பற்றி ''இரவல் குரல் ஏற்காமல் தாமாகவே சகல துறைகளிலும் நாடக இலக்கணத்துடன் சுயமாக இயங்கி நடித்து இற்றைவரை நாடகத்து இலக்கணத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் கலைஞர் ஆவார். அவர் இற்றைவரை புரிந்துவரும் கலைத் தொண்டினையும் அவர் சிறப்பினையும் இம்மலரில் எடுத்துக் காட்டுவது எனது கடமையாகும்.

அக்காலத்தில் நான் நாடகத்தில் பெண் பாத்திரமேற்று நடிப்பதும், பக்கவாத்தியம் வாசிப்பதும் எனது கடமையாக ஏற்றுச் செயற்பட்டேன். கலைஞர் இரத்தினம் அரியாலை ''கலைமகள் நாடக சபா'' ஆரம்பகால உறுப்பினர். கலையின் பெயரால் கலை மகளுக்குக் கோவில் கட்டிக் கலை வளர்க்கும் கவிஞர் ஐயாத்துரையின் மைத்துனராகவும் அவரின் குடும்பமே ஒரு கலைஞர் கூடமாகவும் விளங்கும் வாய்ப்பினையும் பெற்றுள்ளார்.

இவரின் மாமனுர் அமரர் செல்லக்கண்டு நாடகப் பாடல்கள் எழுதுவார். இவரின் சகோதரர்கள், ஆசிரியர் பாலசிங்கம், செல்லத்தம்பி - இவர் மருமகன் வரதராசா ஆகியோர் நாடகக்கலை வல்லுனர்களாகவும், இசைக் கலைஞர்களாகவும் விளங்குகிறுர்கள். ஆகவே இரத்தினத்தின் குடும்பமே கலைக்குடும்பம் என்பதில் கலைஞர் இரத்தினம் பாராட்டப்பட வேண்டியவர். மேலும் நாடக மேடைகளில் இன்று பிரபலமாக விளங்குகின்ற ''ஸ்பெஷல்'' நடிகர் அரியாலை செல்வரத்தினத்தை மேடைக்குக் கொண்டுவந்து, அவரைப் புகழ்பெற்ற நடிகருக்குரிய திறமையும், பெருமையும் கலைஞர் இரத்தினத்துக்கே முதலில் உரியதாகும். அன்றிருந்து இன்றுவரை எமது இரத்தினத்தின் செயற்பாடுகள் ஏராளம். யாவற்றையும் குறிப்பிடின் இம்மலர் விரியும் - அடக்கத்தை ஏற்று சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

காங்கேசன்துறை ''வஸந்தகான சபாவும்'', அரியாலை கலைமகள் நாடக சபாவும் பலகாலம் இணைந்தே செயற்பட்டு வருகின்றன. கலைமகள் நாடக சபாவின் தயாரிப்பிலான ''ஆரியமாலா'', ''பதவி மோகம்'', ''வள்ளி திருமணம்'', ''சத்திய குமார்'', ''அமர்நாத்'' இன்றும் பல நாடகங்களுக்கு வஸந்தகானசபா நடிகர்கள் சேர்ந்து நடித்தும், வாத்தியங்களை இசைத்தும் பங்கு கொண்டுள்ளார்கள். அதேபோல் வஸந்த கானசபா நாடகங்களிலும் கலைமகள் நாடக சபாவினர் பங்குகொண்டார்கள். இதற் கெல்லாம் முக்கிய காரணமாக இருந்தவர் எமது இரத்தினமே. அரிச்சந்திரன் நாடகத்தை இரண்டாயிரம் தடவைக்கு மேல் நடத்திவரும் வஸந்தகான சபாவின் ஆரம்பகால ''சந்திரமதியாக'' நடித்து அந்நாடகத்திற்கு மெருகூட்டியவரும், பல சிரமங்களின் மத்தியில் தன் சுய பலனை எதிர்பாராது கலைச்சேவை புரிந்தவருமாவார். தனது உடல்நிலை காரணமாக தற்போது மேடையில் நடிப்பதைத் தவிர்த்துக் கொண்டாலும் தன்னிடம் சேருகின்ற இளைஞர்களை நாடகத்தில் பயிற்றுவித்து தொண்டு புரிவது இவரின் கலை உளப்பாங்கினை வெளிப்படுத்துகிறது.

கண்டி புஸ்பதான மண்டபம், பேராதனைச் சர்வகலாசாலை, கொழும்பு சைவ மங்கையர் கழக மண்டபம் - லும்பிணி மண்டபம், லயனல் வென்ட், இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலி நிலையம், திருமலை கணேசன் தியேட்டர் ஆகிய பிரபல அரங்குகளில் நடித்து சிங்களக் கலைஞர்களின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

மரபு நாடகக் கலைக்குப் புத்துயிரளித்து ஊக்கமளித்துவரும் யாழ் - பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், அமரர் "இலங்கையர் கோன்", பேராசிரியர் கா. சிவத்தம்பி, அமரர்கள் கலையரசு சொர்ணலிங்கம், கலாஜோதி சண்முகநாதன் (சானு) ஆகியோரின் அபிமானத்தையும் பெற்றவர் இரத்தினம். இவரின் கலைத்தொண்டு மேலும் வளர்க! கலைஞர் இரத்தினம் நீடூழி வாழ்க!!

"வஸந்தகான சபா",
காங்கேசன்துறை.
12-6-1984.

"நாடகக் கொட்டகை என்பதற்கு ஓர் "இலட்சிய இல்லம், என்று பொருள்"

— இங்கர்சால்

---

யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியர்
திரு. வ நடராசா அவர்களின் பாராட்டுரை

## கலைஞர் காத்தான் கந்தையா

திருவாளர் குட்டி கந்தையா அவர்கள் அரியாலையில் பல வருடங்களாக வாழ்ந்து வருகின்றார். கந்தையா அவர்களை காத்தான் கந்தையா என அன்பாக அழைப்பார்கள். இவர் காத்தான் நாடகத்தில் காத்தான் பாத்திரத்தில் மிகவும் சிறப்பாக நடித்துப் பாராட்டுப் பெற்றமையே இவரை எல்லோரும் காத்தான் கந்தையா என அழைப்பதற்குக் காரணமாகும்.

இவர் ஒரு சிறந்த கலைஞராவர். நாடகங்களை இயற்றுவதிலும் வல்லமை படைத்தவர். நாடகத்துக்கு இசையமைத்துத் தானே பாடுவதிலும் விற்பன்னராகி இசையமைப்பாளராகவும் இருந்துள்ளார். இவர் ஒரு சிறந்த சமூக சேவையாளராவர். வைத்தியத்துறை மூலம் இவர் எங்கள் ஊர் மக்களுக்குப் பெரும் பணி புரிந்து வருகின்றார். விஷகடி வைத்தியம் இவருக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்துள்ளது. இவரின் சேவையையும் திறமையையும் அறிந்த அரசினர் இவருக்கு வைத்தியத் துறைச் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்துள்ளனர். இவர் ஆற்றி வருகின்ற விஷகடிவைத்தியத்தை தன் கஷ்டங்களையும் பாராது இராப்பகலாகச் செய்து மக்கட்குப் பெரும்பணி ஆற்றி வருகின்றார் இவர் ஒரு சிறந்த பக்திமானுவர். நாராயண மூர்த்தியை மிகவும் பக்தியோடு வணங்குபவர். கந்தையா அவர்கள் இப்படிப்பட்ட சேவையோடு நிற்காது பல பொதுப்பணிகளிலும் மிகுந்த சேவையாற்றியவர். அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே அவருக்குப் பாராட்டு வைபவம் நடாத்துவது சாலச்சிறந்ததாகும். அவர்கள் இன்னும் பல வருடங்கள் சுகமாக வாழ்ந்து நாட்டுக்குச் சேவையாற்ற வேண்டுமென இறைவனை வேண்டி என் பாராட்டுரையை முடித்துக் கொள்கின்றேன்.

44, கலைமகள் வீதி
அரியாலை, யாழ்ப்பாணம்.
12-6-1984

"நன்மை ஒரு நல்ல வைத்தியன் - ஆனல் தீமை சில சமயங்களில் அதைவிட மிக நல்ல வைத்தியன்

—எமர்ஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலி பாரதி கலாமன்ற நடன ஆசிரியை
திருமதி ஞானமணி செல்லையா அவர்களின்
வாழ்த்துச் செய்தி

## கலைஞர் இரத்தினம்

கற்றுரைக் கற்றுரே காமுறுவர் என்பார்கள். அது போன்றதுதான் எமக்கும் நாடகக்கலை வல்லுனர் இரத்தினம் அவர்களுக்கும் உள்ள தொடர்பாகும். நாட்டியக் கலையை வளர்த்து வரும் எமது கலையரங்கத்தை மிகச் சிறப்பான முறையில் அமைத்துத் தந்தவர் நடிகர் இரத்தினமாகும். கட்டடக் கலைத்துறையில் எவ்வளவு சிறப்புடன் திகழ்கிருரோ, அதைவிட உயர்ந்து நடிப்புத் துறையிலும், இசைத் துறையிலும் விளங்குகிருர். வானொலியில் இவருடைய இசை நாடகத்தைக் கேட்டும், மேடைகளில் இவருடைய நடிப்பின் திறனைப் பார்த்தும் இருக்கிறேன். என்ன கதாபாத்திரமேற்று நடிக்க வந்தாலும், அதே கதாபாத்திரமாக மாறி பார்ப்போர் உள்ளத்தையெல்லாம் கொள்ளை கொள்ளும் தனியாற்றல் இவருக்குண்டு. இவ்விதமான சிறந்த கலைஞரை அரியாலை ஸ்ரீ கலைமகள் சன சமூக நிலையத்தினர் பாராட்டிக் கௌரவிப்பதையிட்டு நான் மிகவும் சந்தோஷம் அடைகிறேன்.

''வாழ்க கலைஞர் இரத்தினம்
வளர்க அவரின் கலைச்சேவை''

பாரதி கலா மன்றம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
10-6-1984.

*"மனிதர்களின் உள்ளத்தில் தூய உணர்ச்சியை உண்டு பண்ணுவது தான் கலை"*
— ரஸ்கின்

---

## அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் 1984-ம் ஆண்டுக்கான செயற்குழு உறுப்பினர்கள்

போஷகர்:- திரு. சி. திருநாவுக்கரசு
தலைவர்:- திரு. ஏ. வீரசிங்கம்
உப-தலைவர்:- திரு. சி. ஜெயரட்ணம்
செயலாளர்:- செல்வன் செ. செல்வக்குமார்
உப-செயலாளர்:- செல்வன் இ. மதிகரன்
பொருளாளர்:- செல்வன் இ. ஸ்ரீரங்கதாஸ்
கணக்குப் பரிசோதகர்: திரு. நா. திருச்செல்வம்

### செயற்குழு உறுப்பினர்கள்

திருவாளர்கள்:- ந. இராமநாதன், தி. சின்னையா, சி. ஜெயராசா
செ. இராசரட்ணம், இ. அரசகேசரி

நிலையப் பொறுப்பாளர்:- செல்வன் த. குமரேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள வைபவங்கள், கோயில் திருவிழாக்கள், நாடக விழாக்கள், கலை நிகழ்ச்சிகள் சிறப்புப்பெற

சிறந்தமுறையில் ஸ்ரீறியோ மோனோ ஒலி அமைப்பில் பழைய, புதிய திரைப்படப் பாடல்களை கேட்டு இன்புற நாடவேண்டிய இடம்

# "வில்வம்ஸ் சவுண்ட்ஸ்"

கலைமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

திரும்பும் திசையெல்லாம் நீங்கள் விரும்பிய முறையில் ஒளி அமைத்திட நாடுங்கள்

## வில்வம்ஸ் சவுண்ட்ஸ் & லைற்ஸ்

பூரண உரிமையாளர்: V. அன்பழகன்

---

நாளைய நாகரீகம் இன்று பிரதி பலிக்கிறது''

நவீனமுறையில் ஜீன்ஸ், பெல்ஸ், சோட்ஸ், சேட்ஸ், குழந்தைகளின் உடுப்புகள், ஆகியவற்றை சிறந்த முறையில் குறித்த நேரத்தில் தைத்துக் கொள்வதற்கு அரியாலையில் ஒரே ஸ்தாபனம்

## சுதன் ரெயிலறிங்

கண்டி வீதி, மாம்பழம் சந்தி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: இந்திரன்

---

முப்பெரும் கலைஞர்களுக்கும் எமது வாழ்த்துக்கள் உரித்தாகுக!

டாக்டர் ஸ்ரீ விக்னேஸ்வரா
வைத்தியப் பதிவாளர்
யாழ்ப்பாணம் — கிழக்கு.

## சிவசக்தி மெடிக்கல் கிளினிக்

கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை நாடக வருகையும் அரசியல் பொருளாதார சமூகசமய பின்னணிகளும்

இசை நாடகம் என இங்கே குறிப்பிடப்படுவது சங்கரதாஸ் சுவாமிகளுடைய நாடக மரபாகும். அதை இன்று ஈழத்தில் பேணி வருபவர் நடிகமணி வி. வி. வைரமுத்து ஆவார்.

## கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் இசை நாடகங்கள் அறிமுகமாயின. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இந்தியக் கலைஞர்களால் இவை சூடப்பட்டன. இசை நாடகங்கள் இலங்கைக்கு வந்தபோது இந்தியாவிலும், இலங்கையிலும் ஆங்கிலேயர் ஆட்சி நிலவியது. இந்தியாவையும், இலங்கையையும் ஆங்கிலேயர் ஒரேமாதிரியாகவே ஆட்சிபுரிந்தனர். இலங்கையர்கள் இந்தியாவுக்குச் செல்லவும், இந்தியர்கள் இலங்கைக்கு வரவும் எவ்வித தடைகளும் இருக்கவில்லை. ஆங்கிலேயருடைய பணம் குடியேற்ற நாடுகளெங்கும் செல்லுபடியாகவிருந்தது.

1796இல் இலங்கையின் கரையோர மாகாணங்களை ஆங்கிலேயர் கைப்பற்றினர். 1802ஆம் ஆண்டில் இலங்கை முடிக்குரிய குடியேற்ற நாடாகியது. 1815இல் இலங்கைக் கடைசிச் சுதந்திர ராஜ்யமான கண்டி ஆங்கிலேயரிடம் வீழ்ச்சியடைந்தது.

ஆங்கிலேயர் ஆட்சியால் இலங்கையிற் பலவகையான மாற்றங்கள் உண்டாயின. ஆட்சித் துறையிலும், நீதித் துறையிலும் புதுப்புது மாற்றங்கள் ஏற்பட்டன.

சேர். வில்லியம் கோல்புறூக்கின் தலைமையில் வந்த ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கைகளும், தகவல்களும் மிகவும் முக்கியமானவை.

நிருவாக வசதி கருதி இலங்கை முழுவதையும் ஒன்றிணைத்து ஓர் அரசியல் அமைப் பின்கீழ் ஆட்சிபுரிய பிரித்தானிய அரசாங்கம் தீர்மானித்தது. கொழும்பு, காலி, கண்டி, திருகோணமலை, யாழ்ப்பாணம் என ஐந்து பிரிவுகளாக இலங்கை பிரிக்கப்பட்டது ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு அரசாங்க அதிபர் நியமிக்கப்பட்டார்.

ஆங்கிலேயர் ஆட்சி ஆரம்பமானபோது தன்னிறைவுப் பயிர்ச்செய்கையே இலங்கையில் இருந்தது. ஆங்கிலேயர் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைகளாகிய தேயிலை, இறப்பர், கோப்பி என்பனவற்றை அறிமுகஞ் செய்தனர். மலைநாட்டிலிருந்த காடுகள் பல அழிக்கப்பட்டன. பெருந்தோட்டங்கள் பல அமைக்கப்பட்டன.

தோட்டங்களில் தொழில் புரிவதற்காக இந்திய தமிழ்த் தொழிலாளிகள் அழைத்து வரப்பட்டனர். இவர்களுடைய வருகையால் பிற்காலத்தில் இலங்கை வரலாற்றில் மாபெரும் மாற்றங்கள் உண்டாயின.

இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் புதிய கலைகளை ஈழத்தில் அறிமுகஞ் செய்தனர். தெருக்கூத்து, காமன்கூத்து, அருச்சுனன் தபசு முதலானவை இவற்றுள் முக்கியமானவை.

பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையால் போக்குவரத்து வசதிகள் விருத்தியடைந்தன. தெருக்களும், புகையிரதப் பாதைகளும் அமைக்கப்பட்டன. துறைமுகங்கள் வளர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றன. கிராமங்கள் வளர்ச்சிபெற்றன. நகரங்கள் உருவாகின. கல்வித்துறை விருத்தியடைந்தது. தபால்துறையும், பத்திரிகைத்துறையும் வளர்ச்சிபெறத் தொடங்கின.

பிரித்தானியாவில் இருந்தே அரசாங்க உத்தியோகத்தர்கள் இதுவரை வரவழைக்கப் பட்டனர். அதனுல் அரசாங்கத்துக்குப் பெருஞ் செலவு உண்டாகியது.

கோல்புறூக் சுதேசிகளுக்கு ஆங்கிலத்தைக் கற்பிப்பதன்மூலம் இச்செலவைக் குறைக்கலாமென விதந்துரைத்தார். கத்தோலிக்கத் திருச்சபையும் கிறீஸ்தவமிஷனரிமாரும் ஆங்கிலப் பாடசாலைகளைக் கட்டி கல்விப்பணி புரியத் தொடங்கினர். ஆங்கிலம் கற்றவர்களுக்கு அரசாங்க உத்தியோகங்கள் கிடைத்தன. மதிப்பான பதவியும் கை நிறையப் பணமுங் கிடைத்த காரணத்திஞல் ஆங்கிலம் கற்பவர்களின் தொகை அதிகரித்தது.

கிறிஸ்தவர்களாக மாறியவர்களுக்கு இலவசக் கல்வியும், உத்தியோக முன்னுரிமையும் வழங்கப்பட்டன. அதனுல் மதமாற்றம் பெருமளவில் நடைபெற்றது.

ஆங்கிலக் கல்வியின் வருகையினுல் பெரியதொரு சமூகப் பிறழ்வு உண்டாகியது. மேல்நாட்டு நாகரீகமும் பண்பாடும் ஈழத்தில் கலக்கத் தொடங்கின. கீழைத்தேயப் பண்பாடும் பழக்கவழக்கங்களும் பாதிப்படைந்தன.

கவர்ச்சிகரமான உத்தியோகமும், பணமும் கிடைத்ததினுல் ஆங்கிலம் கற்றவர்களுள் பலர் தாய்மொழி அழிவதையோ அல்லது தேசியமதங்கள் அழிவதையோ பற்றி எள்ளளவும் கவலைப்படவில்லை.

புதிதாக உண்டாகிய நடுத்தர வகுப்பினரால் சமூக அமைப்பில் புதியதொரு வர்க்கம் உண்டாகியது. இவர்களுக்குச் சமூக அந்தஸ்தும் கிடைத்தது.

பாதிரிமார் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டும் கண்டனப் பிரசுரங்களை வெளியிட்டும் சைவத்தையும், பௌத்தத்தையும் இழித்தும் பழித்தும் வந்தனர். இதில் புதிதாக மதம் மாறியவர்களும் பங்குகொண்டனர். தேசப்பற்றும், சமயப்பற்றுமுடையவர்கள் இதனைக் கண்டு வேதனையுற்றனர். அவர்களுள் வடக்கில் ஆறுமுகநாவலரும், தெற்கில் அநகாரிக தர்மபாலாவும் முன்னேடிகளாகத் திகழ்கிருர்கள்.

ஆறுமுகநாவலர் யாழ். மத்திய கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக இருந்தவர். கிறிஸ்தவர்களுடைய பிரசார முறைகளையும், தந்திரோபாயங்களையும் நன்கு அறிந்தவர். கிறிஸ்தவப் பாசறையில் வாழ்ந்த காரணத்திஞல் அவர்களுடைய நடைமுறைகளைப் பின்பற்றி நாவலரும் சைவத்தையும், தமிழையும் வளர்க்க முற்பட்டார்.

வண்ணுர்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை (1848) அமைத்தும், அச்சுக்கூடம் வைத்து நூல்களை வெளியிட்டும், சைவப் பிரசங்கங்களைச் செய்தும், கண்டனப் பிரசுரங்களை அச்சடித்து விநியோகித்தும் இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன.

மிஷனரிமார்களுடைய பாடசாலைகளையும், ஒருசில சைவ, பௌத்த பாடசாலைகளையும் திண்ணைப்பள்ளிக்கூடங்களையும், பிரிவேனுப் பாடசாலைகளையும் தவிர வேறு போதனு நிலையங்கள் இலங்கையில் இருக்கவில்லை. இவற்றுள் கல்வி கற்றவர்களைத்தவிர மற்றவர்கள் படிப்பறிவில்லாத பாமர மக்களாகவே வாழ்ந்தனர்.

அக்காலத்தில் கல்வி கற்றவர்களின் தொகை மிகக்குறைவு. பெரும்பாலும் பணம் படைத்தவர்களும் கிறிஸ்தவர்களாக மாறியவர்களுமே ஆங்கிலக்கல்வி பெறக்கூடியதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. மற்றவர்களுள் ஒரு சிலர் திண்ணைப் பள்ளிக்கூடங்களிலும், தனிப்பட்ட ஆசிரியர்களிடமும் கல்வி கற்றனர். ஏனையோர் படிப்பறிவில்லாத பாமர மக்களாகவே இருந்தனர். ஆயினும் புராணபடனம், சமயப் பிரசங்கம், நாடகம் என்பவற்றினூடாகக் கல்வி அறிவு வரப்பெற்றனர்.

இசை நாடகங்களின் வருகை பாமர மக்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. அறநெறிகளை அறியவும், சமயநெறிகளை அறிந்து கொள்ளவும், பக்தியை வளர்த்துக் கொள்ளவும் இசை நாடகங்கள் உதவின.

சினிமா, வானொலி இல்லாத அக்காலத்தில் கோயில் திருவிழாக்களிலே ஆடப்பட்ட நாடகங்களும், நடனங்களுமே மக்களுடைய கலைப் பசிக்கு உணவளிப்பனவாக இருந்தன.

பார்சி தியேட்டர் மரபைப் பின்பற்றிய இசை நாடகங்கள் கொட்டகைகளில் ஆடப்பட்டன. கவர்ச்சிகரமான திரைகளும், ஒப்பனைகளும், மிருதங்கம், ஹார்மோனியம் போன்ற பக்கவாத்தியங்களும், ஹாஸ் விளக்குகளும் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. அதனால் மக்கள் பெருந்திரளாகச் சென்று அதனைப் பார்த்தனர்.

இசை நாடகங்களின் வருகையால் ஓரளவு இசைப் பயிற்சியும், இனிய இலகுவான இந்துஸ்தானி மெட்டுக்களில் பரிச்சயமும் உண்டாகின. இசைக் கவர்ச்சியாலும் ஏராளமான இரசிகர்கள் இசை நாடகங்களைப் பார்க்கச் சென்றனர். இலவசமாக நாடகங்கள் பார்த்துப் பழகிய அவர்கள் பணம் கொடுத்துப் பார்க்குமளவுக்கு இரசனையை வளர்த்துக் கொண்டார்கள்.

சமூகக் கட்டுப்பாடு அக்காலத்தில் வன்மையாக இருந்தது. சாதி, சாதிக்குள் சாதி, அதற்குள் பல சாதியென மக்கள் பிரித்து வைக்கப்பட்டனர். நிலம் படைத்தவர்களும், பணம் படைத்தவர்களும் உயர் சாதியினராகவே இருந்தனர். இவர்கள் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஒரு சில மக்களை அடக்கியொடுக்கி வந்தனர். சலுகைகள் மறுக்கப்பட்ட மக்களுக்குக் கல்வி கற்கும் வாய்ப்புக் கிட்டவில்லை. இவ்வாறு நசுக்கப்பட்ட மக்கள் தங்களுடைய அறிவைப் பெறுவதற்கு நாடகங்களைத் தவிர வேறு எந்தச் சாதனங்களையும் அறிந்திருக்கவில்லை. ஏனெனில் கோயிலுக்குள் செல்வதற்கும், புராண படலங்களைக் கேட்பதற்கும்கூட இவர்களுக்கு உரிமை வழங்கப்படவில்லை.

ஆரம்பகாலத்தில் நடிகர்களுக்குச் சமூக அந்தஸ்து இருக்கவில்லை. அவர்களிடையே காணப்பட்ட ஒழுக்கக் கேடுகளும் வறுமையுமே காரணமாகும். காலப்போக்கில் அந்நிலை மாறத் தொடங்கியது. நடிப்பு கௌரவமான ஒரு தொழிலாக மதிப்புப் பெறலாயிற்று.

இசை நாடக வருகையினால் புதுத் தொழிலாளர்களும், கலைஞர்களும் உருவாகினர். ஒப்பனைக் கலைஞர்கள், ஓவியர்கள், இசைக் கலைஞர்கள், நாடக நடனக் கலைஞர்கள், பக்கவாத்தியக் கலைஞர்களெனக் கலைஞர்கள் பலர் கலையைத் தொழிலாகக் கொண்டனர். புது முதலாளிமார்களும் உருவாகினர். இவர்கள் பல கலைஞர்களையும் இணைத்து நாடகத் தொழிலை நடத்தினர்.

இந்தியாவிலே விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்த காலத்தில் இசை நாடகங்கள் இங்கே கொடிகட்டிப் பறந்தன. இசை நாடக மேடைகளெல்லாம் பிற்காலத்தில் பிரசார மேடைகளாகவும் மாற்றமடைந்தன. முக்கியமான நடிகர்கள் நடித்துவிட்டு உள்ளே செல்லு முன்னர் அக்காலத்தில் எரிந்துகொண்டிருக்கும் ஏதாவதொரு பிரச்சினை பற்றிப் பாடிவிட்டுச் செல்வது வழக்கம். அவர் பாடும் பாட்டிற்கும் நாடகத்துக்கும் தொடர்பே இராது. வள்ளி திருமணம் நாடகத்தில் அவர் காந்தியைப் பற்றியும் பாடுவார். தீண்டாமையைப் பற்றியும் பாடுவார். இடைவேளையின்போது ஹார்மோனியக்காரரும் இவ்வாறு பாடுவார்கள். இரசிகர்கள் இவற்றைப்பற்றியெல்லாம் கவலைப் படாமல் இசையையும் சுவைத்து நாடகத்தையும் இரசிப்பார்கள். இதுவே இசை நாடகங்களின் சிறப்பியல்பாகும்.

*"தனி மனிதன் அறநெறியில்*
*சென்றால்தான் சமுதாயம், அரசாங்கம் சரிவர இயங்க முடியும்*

**— கன்பூஷியஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம். வி. எம்.
# கெமிக்கல் இண்டஸ்றீஸ்

31, ஸ்ரான்லி கல்லூரி வீதி, கச்சேரி கிழக்கு,

சித்த ஆயுர்வேத சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்ட பஸ்பம், செந்தூரம், குளிகை, சூரணம், மருத்தெண்ணே, தைலவகைகள், ஆசவா அரிஸ்டங்களேயும்......

## வைத்திய கலாநிதி எம். வி. முருகேசு வைத்தியர்

அவர்களின் கையாட்சியான ஒளஷதங்களேயும் நாணயமான விலேயில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

## டாக்டர் எம். தேவமதுரம்

எம். வி. எம். கெமிக்கல் இண்டஸ்றீஸ், யாழ்ப்பாணம்.

பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களுக்கும், மருந்து வியாபாரிகளும் பங்குதாரராகு சேர்ந்து விசேச கழிவைப் பெற்றுக்கொள்ளலாம்.

---

''கவிஞருக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்''

உங்கள் மனம்போல் சிறந்த முறையில் சலவை செய்யவும், எல்லாவித பட்டு உடைகளேயும் றைக்கிளீன் செய்து கொள்ளவும் சிறந்த இடம்.

## "மனோரஞ்சித சலவைத் தொழிற்சாலே"

905, கனகரட்னம் ரேட் சந்தி,

அரியாலே, யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: சுப்பையா அன் பிறதர்ஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை - இலக்கிய இரட்டையர்கள்

**பிரபல எழுத்தாளர் கே. டானியல்**

கலைகளும் இலக்கியங்களும் ஆதிகாலத்தில் சாதாரண மக்களிடையே இருந்துதான் பிறந்து வளர்ந்து பாதுகாக்கப்பட்டு வந்தன என்பதனை மனித இனத்தின் வரலாற்றை அறிந்தவர்கள் நன்கு உணர்வர். இப்படிப் பிறப்பெடுத்து வளர்க்கப்பட்டு, பாதுகாக்கப் பட்டு வளர்த்த கலை இலக்கியங்கள் இடைக்காலத்தில் மன்னர்களின், பிரபுக்களின், மேல் ஆதிக்கக் காரர்களின் சொத்துக்களாகியதையும், சாதாரண மக்களின் சேவகத்திற் காகப் பயன்படுத்தப்பட்ட அவை இடைக்காலத்தில் பெருமனிதர்களின் சுகபோகங் களுக்காகச் சேவகம் செய்யும் ஒரு கருவியாக ஆக்கப்பட்டமையும் தற்செயலாக ஒரு நிகழ்வு என்று சொல்லிவிட முடியாது.

இந்த நிலைக்குட்பட்ட கலை இலக்கியங்களை மீட்டெடுத்து அவைகளை மறுபடியும் மக்களுக்குச் சேவகம் செய்யவைக்கும் பணியினைப் பிற்காலத்தில் சாதாரண மக்கள் மத்தியிலிருந்து வந்தவர்களே பொறுப்பேற்றுக் கொண்டனர். அப்படிப் பொறுப்பேற் றுக் கொண்டவர்களில் ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்களான திருவாளர்கள் வே. ஐயாத்துரை அவர்களும், க. இரத்தினம் அவர்களும் அடங்குவர்.

கவிஞர் ஐயாத்துரை அவர்கள் கவிதை உலகில் நிரந்தரமாகத் தனது காலடியைப் பதித்துக்கொண்டவர். ''மரபுக் கவிதை'' என்ற உருவ அமைப்பின் வழி நின்று பழைய மரபு முறைக்குள்ளாகவே அன்றாட சராசரி மனிதனின் அபிலாசைகளின் தேவைகளை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்பதனைச் சாதித்துக் காட்டியவர்.

நடிகர் இரத்தினம் அவர்கள் பழைய நாடக வடிவத்துக்குள் நின்றே பெண்மை யின் மகோன்னத மென் உணர்வு இழைகளை வெளிக்கொண்டு வருவதன் சித்து விளை யாட்டினை செய்து காட்டியதன் மூலம் சாதனைகளை நிலைநாட்டியவர். அரிச்சந்திரன் நினைவுக்கு வரும்போது நடிகமணி வைரமுத்து கண்ணுக்கு முன்னே வருவதைப்போல, சந்திரமதி நினைவுக்கு வரும்போது இரத்தினம் கண்ணுக்கு முன்னே வருவார்கள். அத்தனை தூரத்திற்கு நாடக மேடையை ஆட்சி புரிபவர் — புரிந்தவர்.

இவ்விருவரையும் கலை — இலக்கிய இரட்டையர்களாக்கி விழாக் காண்பது கலை - இலக்கிய உலகுக்கு மிகவும் இனிய நிகழ்வாகும்.

*" துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் ஏனெனில் அவர்கள் ஆறுதலளிக்கப்படுவார்கள்.*

**— இயேசுக்கிறிஸ்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ கலைமகள் சனசமூகநிலையத்தின் கையெழுத்துப் பத்திரிகையான
'அறிவொளிக்கலை'யின் ஆசிரியர்
செல்வன் த. குமரேஸ்வரனின் பாராட்டுச் செய்தி

# முப்பெருங் கலைஞர்கள்

அரியாலை ஈன்றெடுத்த இம் முப்பெருங் கலைஞர்கள் எமது 'அறிவொளிக்கலை' கையெழுத்துப் பத்திரிகைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருபவர்கள். இம் மூவருடைய பாராட்டு விழா மலருக்கு அறிவொளிக் கலையின் ஆரம்ப ஆசிரியர் திரு. இ. அரசகேசரி அவர்கள் ஆசிரியராக இருப்பதில் பெருமைப்படுகின்றேன்.

தென்மோடி நாட்டுக் கூத்தில் சிறந்தவரான திரு. கு. கந்தையா, நாடகம், கவிதைத்துறைகளில் புகழ் பெற்றவரான திரு. வே. ஐயாத்துரை மாறுபட்ட பல பாத்திரங்களில் நடித்துப் புகழ்பெற்ற திரு. க இரத்தினம் ஆகியோர்களுக்கு பாராட்டு மலர் ஒன்றை எமது சனசமூக நிலையம் வெளியிடுவதைப் பாராட்டுகிறேன்.

அரியாலை, யாழ்ப்பாணம்.
14-6-1984

" மலர்ந்த பூ கவிஞனின் இதயத்தைப்
பாடவே தூண்டுகிறது.

— தாகூர்

---

அரியாலை ஸ்ரீ கலைமகள் சன சமூக நிலைய மாதர் சங்கத் தலைவி
திருமதி ஜெயபாரதி சிவதாசனின் ஆசிச் செய்தி

# மாதர்கள் வரவேற்கிறோம்.

நல்லறிஞர்களையும், கல்விமான்களையும் உருவாக்கிவரும் அரியாலையில் கலையைப் பேணும் கலைமகள் சமூகத்தில் வந்துதித்த திருவாளர்கள் வே. ஐயாத்துரை, க. இரத்தினம், கு கந்தையா ஆகியோருக்கு அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தினர் பாராட்டுவிழா மலர் ஒன்றை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

திரு. க. இரத்தினம், திரு. கு. கந்தையா ஆகியோர் தமது இளவயதிலே நடிப்புத் துறையில் மேம்பாடுற்று விளங்கினார்கள். நவீன ஒலி, ஒளிச் சாதனங்களற்ற அக் காலத்திலேயே தமது குரல் வளத்தாலும், நடிப்பாற்றலாலும் மக்கள் மனதில் இடம் பிடித்திருந்தார்கள்.

திரு. வே. ஐயாத்துரை அவர்கள் நாடகம், இசை, கவிதைத்துறையில் ஆற்றல் பெற்றிருந்தார். இவரால் அரியாலை புகழ்பெற்றதெனலாம்.

இத்தனை சிறப்பு வாய்ந்த கலைஞர்களுக்கு விழாவெடுத்துக் கௌரவிப்பதை மாதர்களாகிய நாம் வரவேற்பதோடு அவர்களின் கலைச்சேவை மேன்மேலும் உயர்வுற்று ஓங்க எல்லாம் வல்ல கலைத்தேவியைப் பிரார்த்திக்கிறோம்.

மாதர் சங்கம்
அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம்
14-6-1984

"பெண்களின் அழகு அவர்களுடைய தூய நடத்தையில் தான் -
நகைகளில் அல்ல!

— காந்திஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக
நிலையத்தின் தந்தை

# அமரர் திரு வே. கதிர்காமு



## சமூக சிற்பி

ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் ஆரம்ப காலந்தொட்டு அதன் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்ட பெரியாராகும். எமது சமூகத்திற்கு ஒரு சனசமூக நிலையம் நிரந்தரமான காணியில் அமைய வேண்டுமென்பதை நன்குணர்ந்து செயலிற் காட்டியவர். சனசமூக சீர் திருத்தத்தில் அக்கறை கொண்ட இவரை எமது சமூகச் சிற்பியெனலாம். "மேசன்" என்று அன்பாக அழைக்கப்பட்ட இவரை எல்லோரும் விரும்பினர்கள்.

கற்றவரும் மற்றவரும் கருதிப் பேற்றும்
கலைமகளாம் சனசமூக நிலைய மோங்க
உற்றவரும் நற்பணிகள் உவந்தே செய்யும்
ஊக்கமுள மக்களிலே ஒருவனைகப்
பற்றுடையோன் கதிர்காமு அண்ணல் நாளும்
பங்குபற்றிப் பரந்தபணி ஆற்றி வந்த
நற்செயலை நாடறிய நன்றி கூறி
நல்நினைவு கூர்ந்திடுவோம் நாளும் நாமே

கவிஞர் வே. ஐயாத்துரை

அன்னரின் உருவப்படம் **24-6-1984** அன்று முன்னாள் தலைவரும், ஆசிரியருமான திரு. வே. இராசையா அவர்களால் சனசமூக நிலைய மண்டபத்தில் திரை நீக்கம் செய்து வைக்கப்படுகிறது.

அரியாலை, யாழ்ப்பாணம்.
*15-6-1984*

ஆ+ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்நகரில் இன்றைய நாகரீகத்திற்கு ஏற்ப அழகான, உறுதியான, சகலவிதமான வீட்டுத் தளபாடங்களுக்கும்,

சொகுசான **Ceyesta, Arpifoam** மெத்தைவகைகளுக்கும் சிறந்த ஸ்தாபனம்.

# யப்னு ரேடிங் கொம்பனி

## பேணிச்சர்ஸ் பலெஸ்

சகலவிதமான தளபாடங்களும், மெத்தை வகைகளும் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.

## யப்னு ரேடிங் கொம்பனி

## பேணிச்சர்ஸ் பலெஸ்

79, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## நன்றி மறவேல்

மலர் வெளியிடுவதென்பது இக்காலத்தில் சாதாரண செயலல்ல.

- இம்மலரை வெளியிட அனுமதி தந்த நிலைய நிர்வாகிகளிற்கும்
- விளம்பரம் தந்துதவிய வர்த்தகப் பிரமுகர்களிற்கும்,
- ஆசிச்செய்திகள் தந்த பெரியோர்களுக்கும்,
- விழா ஆரம்பமுதல் இறுதிவரை எம்மோடு தோளோடு தோள்நின்று உதவிய இளைஞர் கலாமன்ற, மாதர் சங்க நிர்வாகிகளிற்கும்,
- விளம்பரம் சேகரிக்க உதவிய அன்பர்களிற்கும்,
- மலரை அழகுற தொகுத்துத் தந்த மலர் ஆசிரியர் இ. அரசகேசரி அவர்கட்கும்,
- அட்டைப்படம் வரைந்துதவிய த. ஸ்ரீ பாஸ்கரன் அவர்களிற்கும்,
- அழகுற இம்மலரை அச்சேற்றித் தந்த அபிராமி அச்சக உரிமையாளர், ஊழியர்கள் யாபேர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.
- மேலும் பலரின் ஆசிச் செய்திகள் வந்து குவிந்துள்ளன. காலநேரம் போதாமையால் அவற்றை இங்கு பிரசுரிக்க முடியவில்லை. அவர்களுக்கும் எமது நன்றிகள்.

இங்ஙனம்
செயலாளர்

UNIVERSITY OF JAFFNA
University of Jaffna
250251
Library
250251
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
ARCHIVES

"தினந்தோறும் காலையில் தேநீர் பருகுவதற்குப் பதிலாக ஒரு குவளை பதநீர் பருகினல் காலை உணவாக வேறெதும் தேவைப்படாது."

— மகாத்மாகாந்தி

ஊட்டச் சத்துக்கள் நிறைந்த சுத்தமான பதநீர் உங்களுக்காகவே போத்தலில் அடைத்து விற்பனை செய்யப்படுகின்றது. பின்வரும் இடங்களில் பதநீரைக் கேட்டு வாங்கிப்பருகி ஆனந்தியுங்கள்!

- எஸ். சண்முகராசா (யாழ். நீதிமன்றம் முன்பாக)
- வீ. சுப்பிரமணியம் ,, ,, ,,
- கச்சேரி வை. எம். சீ. ஏ. கன்ரீன்
- தேசிய வீடமைப்புச் செயலக கன்ரீன்
- பாம் புரடக்ஸ், பிரதான வீதி.
- எம். பஸ்ரியாம்பிள்ளை, பிரதான வீதி.
- ரியூலிப்ஸ், பிரதான வீதி.
- கற்பகம், கே. கே. எஸ். வீதி.
- கற்பகம், பொன்னம்பலம் வீதி.
- கொழும்பு பன்சி கவுஸ், யாழ்ப்பாணம்.
- எஸ். நடராசா, யாழ். பஸ் நிலையம்.
- யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்.

உங்கள் உணவைச் சுவையூட்டும் பனம் சிரப், பனம் கோடியல், பனம் ஜாம் ஆகியவற்றை எமது 'கற்பகம்' விற்பனை நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

# பனை அபிவிருத்திச்சபை

## தேசியவீடமைப்புச் செயலகம்

## யாழ்ப்பாணம்.

தொலைபேசி: **23801, 22094**

வியாபாரிகளுக்குத் தகுந்த கழிவு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்களுக்கு விழா எடுத்து கௌரவிக்கும்
அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் பணி
சிறந்தோங்க வாழ்த்துகிறோம்.

ARCHIVES

மின்சார ஒட்டுவேலைகள், கேற்றுகள், யன்னல்கள், கிறீல்கள், இரும்புக் கதிரைகள், சுருக்குக் கேற்றுகள், இரும்பு வேலைகள் எதுவானாலும்
நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஸ்தாபனம்.

# "பாலா வெல்டிங் வேக்ஸ்"

**120,** புங்கன்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: **S. K.** பாலசுந்தரம்

சகல வைபவங்களிற்கும் கதிரைகள் வாடகைக்கு விடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அபிராமி அச்சகம், 17B, ஜும்மா மொஸ்க் லேன், யாழ்ப்பாணம்.